## ஊடக வெளியீடு

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): செப்டெம்பர் 2018**

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்**

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **நவம்பர் 09, 2018**

வெளியிடப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) பெறுமதிகளுக்கமைய, 2017 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாத உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 2018 செப்டெம்பர் மாதத்திற்கான உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் 0.7% இனால் குறைவடைந்துள்ளதென திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஐ.ஆர். பண்டார இந்தச் சுட்டெண்னை வெளியீடு செய்யும் உத்தியோகபூர்வ வெளியீட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2018 செப்டெம்பர் மற்றும் 2017 செப்டெம்பர் மாதங்களில் முறையே 106.9 மற்றும் 107.7 எனப் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளைத் தயாரித்து வெளியீடு செய்கின்றது. இந்தக் குறிகாட்டிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையாளம் காண்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான துறைகளை அடையாளம் காண்பதற்கு, பொருளாதாரத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு, கொள்கை வகுப்பாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கும் அரசினைப் போன்று கைத்தொழில் நிறுவனங்களாலும் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கமைய குறிப்பிட்ட காலப்பகுதிக்கமைவாக தரப்பட்ட காலப்பகுதிக்குள் பொருளாதாரத்தின் கைத்தொழில் துறையின் தன்மையினை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் மூலம் அடையாளம் காணமுடியும்.

2017 செப்டெம்பர் மாதத்தின் மாதாந்த உற்பத்திக் கொள்ளளவுடன் ஒப்பிடுகையில் 2018 செப்டெம்பர் மாதத்திற்கான ‘வேறு உற்பத்திகள்’(மோட்டார்வாகனம் மற்றும் ற்றேலர் உற்பத்திகள் வேறு போக்குவரத்து உபகரண உற்பத்திகள்,ஆபரண உற்பத்திகள்), “துணி வகை உற்பத்தி”,மற்றும் பான உற்பத்திகள் என்பனவற்றில் முறையே 20.8%, 14.6% மற்றும் 11.0% எனும் அதிகரிப்பு பதிவு செய்துள்ளது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ காலண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| செப்டெம்பர் - 2017 | 107.7 |
| செப்டெம்பர் - 2018 | 106.9 |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) -0.7 | |
| | |
| 2018, 3ஆம் காலாண்டு – 107.4 | |

கைத்தொழில் துறையில் உள்ளடங்கும் “புகையிலை”,கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள்”, “மின் உபகரண உற்பத்திகள்” 2017 செப்டெம்பர் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் முறையே 23.0%, 22.2% மற்றும் 17.0% வீழ்ச்சி பதிவாகியுள்ளது.2018 செப்டெம்பர் மாத உணவு உற்பத்தியில் 2.2% வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 3ம் காலாண்டில் கைத்தொழிற் துறையில் ஒப்பீட்டு ரீதியில் 0.2% அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

2018 ஆண்டின் செப்டெம்பர் மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் தொடர்பான மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் (www.statistics.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.